**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM**

**O.S.No.37/2019**

நாள் 05.04.2023

DW1 – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் 07.07.2014 அன்று காலமாகிவிட்டார். அவர்தான் தாவா கிரய உடன்படிக்கையை வாதிகளுக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த கிரய உடன்படிக்கை தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். அது வா.சா.ஆ.9. அந்த கிரய உடன்படிக்கை எழுதப்பட்டதற்கு பிறகு 12.06.2013 அன்று என் தகப்பனார் வாபதிகளிடமிருந்து மேலும் ரூ.10,00,000/– பெற்றுக் கொண்டு அதற்காக வரவு ரசீது வா.சா.ஆ.9 ஆவணத்திலேயே எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த வரவு ரசீது வா.சா.ஆ.10.

அதன் பின்னிட்டு 29.06.2013 அன்று என் தகப்பனார் வாதிகளிடமிருந்து மேலும ரூ.10,00,000/– பெற்றுக் கொண்டு அதற்காக வரவு ரசீது வா.சா.ஆ.9 ஆவணத்திலேயே எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த வரவு ரசீது வா.சா.ஆ.11. வாதிகள் சொன்னதன் அடிப்படையில் என் தகப்பனார் 19.09.2013 அன்று வேணி என்பவருக்கு தாவா சொத்தில் ஒரு ப்ளாட்டை கிரயம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அதே தேதியன்று வாதிகள் சொன்னதன் அடிப்படையில் என் தகப்பனார் செல்வி என்பவருக்கு தாவா சொத்தில் மற்றொரு ப்ளாட்டை கிரயம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான்.

07.10.2013 அன்று வாதிகள் சொன்னதன் அடிப்படையில் என் தகப்பனார் அய்யன்துரை என்பவருக்கு தாவா சொத்தில் மற்றொரு ப்ளாட்டை கிரயம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த 3 கிரய பத்திரங்களையும் நானே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். 19.09.2013 அன்று

என் தகப்பனார் வாதிகளிடமிருந்து ரூ.78,50,000/- பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள முதல் ரசீதை எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. அந்த ரசீதில் உள்ள கையொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம் இல்லை.

அதே போல் என் தகப்பனார் வாதிகளிடமிருந்து 07.10.2013 அன்று ரூ.11,50,000/- பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள 2வது ரசீதை எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. அந்த ரசீதில் உள்ள கையொப்பமும் என் தகப்பனாரின் கையொப்பம் இல்லை. என் தகப்பனார் உயிருடன் இருந்த சமயத்திலேயே தாவா சொத்தை அவர் வேறு நபர்களுக்கு கிரயம் செய்ய முயற்சிப்பதாக சொல்லி வாதிகள் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.94/2014 என்று வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

அது பொய் வழக்கு. அந்த வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் என் தகப்பனார் காலமாகிவிட்டார். அந்த வழக்கானது என் தகப்பானரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் வழக்கு தள்ளுபடிஆகிவிட்டது. என் தகப்பனாரிடம் கொடுக்கப்பட்ட பணத்தை திரும்ப கேட்டுதான் வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். வாய்தா காலம் முடிவடைந்துவிட்ட காரணத்தினால் பணத்தை திரும்ப கொடுக்க முடியாது என்றுதான் நாங்கள் எதிர்வாதம் செய்கிறோம் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி 19.09.2013 அன்று ரூ.78,50,000/-மும், 07.10.2013 அன்று ரூ.11,50,000/-மும் என் தகப்பனார் வாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டு அந்த ரசீதுகளை எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றாலும் வா.சா.ஆ.2 ஆவணம் உண்மையான ஆவணம் என்றாலும் சரியல்ல. தாவா

சொத்துக்கள் எங்கள் வசம்தான் இருக்கிறது. வாதிகளிடமிருந்து என் தகப்பனார் பெற்றுக் கொண்ட பணத்தை அவரது வாரிசுகள் என்ற அடிப்படையில் நாங்கள் வாதிகளுக்கு திரும்ப செலுத்த கடமைபட்டவர்கள் என்றால் சரியல்ல.

வாய்தா காலம் தவறிவிட்டதால் பணத்தை வாதிகள் திரும்ப கேட்க முடியாது என்று நான் சொல்வது ஏற்றுக் கொள்ள முடியாதது என்றால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- **G. Sri Rama Jeyam)**

III Additional District Judge,
Salem.